செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம்
30-07-2021 அன்று முற்பகல் 11.00 மணிக்கு
நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

தலைவர் : செல்வி. வெ. சித்திரா ப.எம், எம்.,
தனி அலுவலர், ஆணையர்

<u>மன்றப்பொருள் :</u>

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிகளை தனியார் மூலம் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 146 நாள் 05–03–2019ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் படி எ.வி.எம் சர்வீஸ் பாய்ண்ட், நிறுவனத்திற்கு ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட்டு தற்பொழுது காலாவதி ஆகிவிட்டதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் நாள் வரை பழைய விலை விகிதத்தில் எ.வி.எம் பாய்ண்ட் சர்வீஸ் நிறுவனம் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும், 05–03–2020 முதல் பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 1281/2018/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. 05–03–2020 முதல் தற்பொழுது வரை பழைய விலை விகிதத்தில் எ.வி.எம்.சர்வீஸ் பாய்ண்ட் நிறுவனம் மூலம் துப்புரவு பணி மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் நாள் வரை எ.வி.எம்.சர்வீஸ் பாய்ண்ட் நிறுவனம் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>மன்றப்பொருள் :</u>

செங்கோட்டை நகராட்சி வல்லம் ரோட்டில் உள்ள மகளிர் பொது இலவச கழிப்பிடத்தினை சுகாதாரமாக பேணிக் காத்திடவும், பொது இடங்களில் மலம் கழிப்பதனை தவிர்த்திட நடவடிக்கை எடுக்கும் விதமாக ( OD Free என அறிவிப்பதற்காகவும்) அப்பகுதியினை சுகாதாரமான பகுதியாக மாற்ற வேண்டி இருப்பதால் மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இரண்டு பொது மகளிர் கழிப்பிடத்தினை பராமரிப்பு பணி மேற்கொள்ள மாதம் ரூ.5000 வீதம் ஸ்ரீஅன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு 01–08–2021 முதல் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் : 440/2018/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. பொது இடத்தில் மலம் கழிப்பதனை தவிர்த்திடும் நடவடிக்கைக்காகவும், பொது கழிப்பிடத்தினை சுகாதாரமாக பேணிக் காக்க வேண்டியும் ஸ்ரீ அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இரண்டு பொது மகளிர் கழிப்பிடத்தினை பராமரிக்க ரூ.5000 மாதம் ஒன்றுக்கு 01–08–2021 முதல் வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றப்பொருள் :

வட்டாட்சியர், செங்கோட்டை அவர்களின் கடிதம் ந.க.அ1/216/2021 நாள் 05.07.2021ல் செங்கோட்டை வட்டம், செங்கோட்டை டவுன் கிராமம், புல எண் N.3.72 அரசு புறம்போக்கு பாதை விஸ்தீரணம் 95 ச.மீ நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ள இசக்கி, த/பெ. இசக்கி–1, இசக்கி, த/பெ.ஆதீனன் என்ற 2 நபர்களுக்கு தமிழக அரசு சிறப்புத் திட்டத்தின் கீழ் வரைமுறை செய்து இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதக்கு தகுதியுடைய நபர்களாக தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பரிந்துரை செய்து பிரேரணை அனுப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி புல எண்ணிற்கு இசக்கி, த/பெ. இசக்கி–1, இசக்கி, த/பெ.ஆதீனன் என்ற 2 நபர்களின் பெயருக்கு பட்டா வழங்க தடையில்லா சான்று வழங்ககோரி கடிதம் பெறப்பட்டுள்ளது.

செங்கோட்டை வட்டம், செங்கோட்டை நகராட்சி, செங்கோட்டை டவுன் கிராமம், புல எண் N.3.72 அரசு புறம்போக்கு இடம் நேரில் பார்வையிடப்பட்டதில், நடை பாதைகளுக்கு எவ்வித இடையூறுமின்றி இரண்டு நபர்களும் வீடு கட்டி சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக குடியிருந்து வருவதாகத் தெரிய வருகிறது. மேலும் மேற்கண்ட இடமானது பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறும் இல்லாததால் மேற்படி இரண்டு நபர்களுக்கும் பட்டா வழங்க இந்நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணைகளும் இல்லை என வருவாய் வட்டாட்சியர், செங்கோட்டை அவர்களுக்கு கடிதம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 723/2021/எப்1)

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள் :

செங்கோட்டை நகராட்சி அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பாரதி மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் பணியாளர்களை பெற்று மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது, மேற்காணும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் தொகையினை, தொழிலாளர் நலவாரியம் கணக்கில் செலுத்தி தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி சார்பில் JKS Consultancy, Sivaksi என்ற நிறுவனத்தினை நியமனம் செய்வதற்கும், மற்றும் மாதம் தோறும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யும் தொகையினை தொழிலாளர்களின் வருங்கால வைப்புக் கணக்கில் செலுத்தி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 781/2012/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. இந்நகராட்சி சார்பில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கினை பராமரிக்கும் பணி மற்றும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ள JKS Consultancy, சென்னை என்ற நிறுவனத்தினை நியமனம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாதம் தோறும் தொழிலாளர் மதிப்பூதியம் தொகையில் பிடித்தம் செய்யும் வருங்கால வைப்பு நிதி தொகையினை பணியாளர்களின் வருங்கால வைப்புத் தொகை கணக்கில் வரவு வைத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்திற்கு மேற்கண்ட தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>மன்றப்பொருள் :</u>

செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்காக 2021–2022ம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணினி சாதனங்கள் மற்றும் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு அனுமதி பெற்றுள்ள கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்ய தகுந்த கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | கூட்டுறவு நிறுவன பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்காக 2021–2022ம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணினி சாதனங்கள் மற்றும் அவ்வப்போது தேவைக்கேற்ப பொருட்கள் கொள்முதல் பணி | திருமுல்லைவாயில் ஸ்டேசனரி, பிரிண்டிங்க, புக் பைண்டிங், அலுமினயம், லைதர் மேனுபேக்சரிங் இண்டஸ்டிரியல் கோ ஆப் சொஸைட்டி லிமிடெட், சென்னை | ரூ.33,947/- |
| | | கீழ்பாக் ரிஜிஸ்டர் மேக்கிங், புக் ஸ்டேசனரி, பைண்டிங்க, எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் புராடக்ட்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப் சொஸைட்டி லிமிடெட், சென்னை | ரூ.34,871/- |

(ந.க.எண் ;902/2017/டி2)

ஆலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமுல்லைவாயில் ஸ்டேசனரி, பிரிண்டிங்க, புக் பைண்டிங், அலுமினயம், லைதர் மேனுபேக்சரிங் இண்டஸ்டிரியல் கோ ஆப் சொஸைட்டி லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை மன்றம் ஏற்கலாம்.

மன்றப்பொருள் :

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வண்டி எண் TN 76 AM 3422 வண்டிக்கு விபத்துக் காப்பீடு 12-08-2021 உடன் முடிவடைய இருப்பதால், 13-08-2021 முதல் 12-08-2022 வரை புதுப்பிக்க யூனிடெட் இந்தியா இன்சூரன்ஸ், தென்காசி என்ற நிறுவனத்திற்கு ரூ.19383/ ஒரு வண்டிக்கு வீதம் மொத்தம் ரூ.38766/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 3144/2012/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. விபத்துக் காப்பீடு புதுப்பிக்க யூனிடெட் இந்தியா இன்சூரன்ஸ், தென்காசி என்ற நிறுவனத்திற்கு ரூ.38766/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியல் இருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்.

செங்கோட்டை நகராட்சி பகுதியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21-ன் கீழ் சாலைபணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 296 நாள். 11.12.2020ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 20557/2020/இ3, நாள். 14.12.2020ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக, தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 23659/2020-28/டி.ஒ2, நாள் 21.12.2020 தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது

.

மேற்படி சிறப்பு சாலை பணிகளுக்கு ஒளிமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 11.01.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| சிப்பம் எண் | பணியின் விபரம் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| சிப்பம் 1 | செங்கோட்டை நகராட்சி பெரியசாமி தெரு, சுப்பையா தெரு, பெரியபள்ளிவாசல் தெரு, பூம்புகார் தெரு, காதர் ஒலி தெரு, வடக்குரத குறுக்கு தெரு, முத்தழகி அம்மன் கோவில் தெரு, டவுண்ஹால் ரோடு மற்றும் கொட்டாரம் ரோடு வார்டு எண். 2, 4, 6,18, 19, 20, 21, 22, 23 தார்தளம் புதுப்பித்தல் பணி | ரூ.12201452/- | திரு. பி.விஜயபாலன் | 6.28 % மதிப்பீட்டைவிட கூடுதல் |
| | | | திரு.எஸ்.ஆறுமுகம் | 4.91 % மதிப்பீட்டைவிட கூடுதல் |
| சிப்பம் 2 | செங்கோட்டை நகராட்சி ஆனந்த் தியேட்டர் ரோடு, காமராஜ் காலனி ரோடு, வல்லம் ரோடு, | ரூ. 11556176/- | திரு. பி.விஜயபாலன் | 4.88 % மதிப்பீட்டைவிட கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1&2 பேருந்து நிலைய பின்புற சாலை, கீழ ரதவீதி, மேலரதவீதி, மற்றும் வடக்கு ரத வீதி ஆகிய தெருக்களில் தார்தளம் புதுப்பித்தல் பணி | | திரு.எஸ்.ஆறுமுகம் | 5.64 % மதிப்பீட்டை விட கூடுதல் |
| சிப்பம் 3 | செங்கோட்டை நகராட்சி அண்ணாதெரு, அண்ணா நகர் தெருக்கள், பள்ளிவாசல் தெரு, எஸ்.ஆர்.கே.தெரு வாாடு எண் 17,23,13 ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | ரூ. 8533520/- | திரு. பி.விஜயபாலன் | 4.85 % மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு.எஸ்.ஆறுமுகம் | 6.17 % மதிப்பீட்டை விட கூடுதல் |
| சிப்பம் 4 | செங்கோட்டை நகராட்சி சாமியார் தெரு, காலசாமி தெரு,வெள்ளையன் தெரு, காமாட்சி அம்மன் கோவில் தெரு, புலவர் தெரு மற்றும் ஆறுமுகசாமி ஒடுக்கம் சாலை ஆகிய சாலைகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | ரூ. 11033265/- | திரு. பி.விஜயபாலன் | 6.46 % மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு.எம்.சின்னதம்பி | 4.85 % மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்படி சாலை பணிகளின் 4 சிப்பங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தத்தொகையை விட விலைவிகிதம் கூடுதலாக ஒப்பந்தத்தாரர்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, 21.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்பு செய்ய (Negotiation) அறிவிப்பு வழங்கப்பட்டது. 27.01.21 அன்றைய ஒப்பந்தத்தாரர்கள் கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தைவிட சந்தையின் விலை விகிதம் அதிகமாக உள்ளதால விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்படி பணிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பாாவைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

1. அரசின் சீரிய திட்டம் என்பதாலும், பொது மக்கள் நலன் கருதியும் மேற்படி பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டியஅவசியம் உள்ளதாலும் சிப்பம் எண் 1ல் உள்ள பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்சமாகவும் ஒப்பந்த தொகைக்கு 4.91 % அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எஸ்.ஆறுமுகம் எனபவரின் ஒப்பந்தப்புள்ளியினையும், சிப்பம் எண் 2ல் உள்ள பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்சமாகவும் ஒப்பந்தத்தொகைக்கு 4.88 % அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. பி.விஜயபாலன் எனபவரின் ஒப்பந்தப்புள்ளியினையும், சிப்பம் எண் 3ல் உள்ள பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்சமாகவும் ஒப்பந்தத் தொகைக்கு 4.85 % அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு பி.விஜயபாலன் எனபவரின் ஒப்பந்தப்புள்ளியினையும், சிப்பம் எண் 4ல் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்சமாகவும் ஒப்பந்தத்தொகைக்கு 4.85 % அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எம்.சின்னதம்பி எனபவரின் ஒப்பந்தப்புள்ளியினையும், தமிழ்நாடு பொறியியல் கையேடு சேப்டர் 2, பிரிவு 2.7.2ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத் தொகை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதி மூலம் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் முன்னுரிமை படி வழங்கப்படும்.